உ

சிவமயம்

# நினைவு மலர்



**கிழக்கிலங்கை காகித ஆலை பாதுகாப்பு உப உயர் அதிகாரியாக கடமைபுரிந்தவரும் ஆலையடி வேம்பு பிரதேச மக்கள் சேவையாளரும், செல்வராஜா பத்மாவதியின் அன்புக்கணவருமான**

**அமரர் செல்வராஜா சிறிஸ்கந்தராஜா**


**அவர்களது நினைவு மலர்**

விபுலானந்த வீதி
அக்கரைப்பற்று - 07
2000. 07. 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையன்

# அமரர் செல்வராஜா சிறிஸ்கந்தராஜா



உதயம் :- 1953 - 07 - 21

மறைவு :- 2000 - 05 - 31

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதில்லார்
தோன்றிற் தோன்றாமை – நன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைத் தொகுப்பு

## காப்பு

*திருச்சிற்றம்பலம்*

பிடியதனுருவுமை கொளமிகு கரியது.
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர வருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

## தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பஃலக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சியவாயவே.

## திருவாசகம்

*திருச்சிற்றம்பலம்*

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோல்
உடைவன னேமன்னு முத்தர
கோசமங்கைக்கரசே
கடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந்த தருளும்
எங்கணா யகனே போற்றியே ழிருக்கை
இறைவவே போற்றியே போற்றி

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கண் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

*திருச்சிற்றம்பலம்*

இறவாத வன்பவன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் மின்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின் கீழ்
இருக்க வேண்டும்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருள்வாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
இறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலி வளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறை விலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலங்கை காகித ஆலை பாதுகாப்பு உப உயர் அதிகாரியும், ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் சேவையாளரும், செல்வராஜா பத்மாவதியின் அன்புக் கணவருமான அமரர் செல்வராஜா சிறிஸ்கந்தராஜா அவர்களது வாழ்க்கை வரலாறு.

இயற்கை வளம் நிறைந்த இலங்கைத் திருநாட்டில் மாருதப் புரவீக வல்லியின் குதிரைமுகத்தை அழகிய முகமாக மாற்றி அற்புதம் புரிந்த கந்தன் ஆலய மணி ஓசை ஓங்கி ஒலித்து நிற்கும் மாவிட்டபுரத்தில் உயர் சைவ குலத்தில், மாப்பாணர் மரபில் வைரவநாதன் செல்வராஜா எனும் அன்பர் சரஸ்வதி நல்லாளை மணம் செய்து வாழ்ந்து வரும் நாளில், தொழில் நிமித்தம் நித்தலம் கொழித்திடும் ஆழ்கடலினால் சூழப்பட்ட கோணேஸ்வரர் தலம் அமைந்துள்ள புண்ணிய பூமியாம் திருகோணமலையில் வாழ்ந்து வந்தார். செல்வராஜா சரஸ்வதி தம்பதிகளது, தம் இனிய வாழ்வில் பிறந்த செல்வங்கள் மூன்று இவர்களுள் மூத்தோனாய் சிறிஸ்கந்தராஜா 1953 - 07 - 21ல் பிறந்தார். இவரது சகோதரன் சிறிரங்கராஜா, சகோதரி சாந்தநாயகி, சிறிஸ்கந்தராஜாவின் சிறிய தாயார் பாக்கியலெட்சுமி. சிறிய தாயின் மக்களான சகோதரர்கள், கௌரிகலாதேவி காலஞ் சென்ற தேவராணி, காலம் சென்ற உமா, ஜெயசீலன், சுதாமதி ஆகியோராவர். இவரது அன்புமைத்துனர்கள் ராஜுரெட்ணசிங்கம், சந்திரசேகரம், பாலிப் ஆவர்.

அந்நாட்களில் கிழக்கின் கல்விக் கூடங்களில் சிறந்து விளங்கிய வந்தாறு மூலை மகாவித்தியாலயத்தில் தமது கல்வியை பயின்று கொண்ட இவர் வாழைச்சேனையில் அமைந்துள்ள காகித ஆலையில் பாதுகாப்பு உதவியாளராக 1979ல் சேர்ந்து கொண்டார். அங்கு அவர் கடமை வீரனாகவும் கண்ணியம் மிக்க உத்தியோகத்தராகவும் சக உத்தியோகத்தர்களால் மதிக்கப்பட்டார். 'செய்யும் தொழிலே தெய்வம்' எனும் உயரிய பண்புடன் சேவை புரிந்த இவரின் சேவைத்திறனைக் கண்ட நிர்வாகம் அவருக்கு 1991ல் பாதுகாப்பு உயர் அதிகாரியாக பதவி உயர் வழங்கியது.

அவர் தமது வாழ்க்கைத் துணைவியாக சௌபாக்கியவதி செல்வராஜா பத்மாவதியை 1973ம் ஆண்டில் திருமணம் செய்தார். நால்வகை நிலங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிரும் அக்கரைப்பற்று எனும் இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழில் கொஞ்சும் பதியில் வாழ்ந்த பணிக்கனார் குடிப்பெருமகன் தம்பியப்பா செல்வராஜா.அவர்தம் அன்பு மனைவி செல்வராசா நேசம்மாவிற்கும் மூத்த செல்வியாக பத்மாவதி எனும் பண்புடை நங்கை பிறந்தாள். சிறிஸ்கந்தராஜா பண்புடை பத்தினியாளளுடன் இன்புடன் வாழ்ந்து பெற்ற செல்வங்கள் நான்கு. சிறிஸ் கந்தராஜா மணிவண்ணன் பண்புடைய முதல்வன் பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில் பயில்கின்றான். இளவல் சிறிஸ்கந்தராஜா மணிசேகர் காலத்தின் நிமித்தம் கடல் கடந்து கனடாவில் வாழும் செல்வம். மூன்றாம் முத்தாம் அழகு மகள் சிறிஸ்கந்தராஜா துஸ்யந்தி. ஈற்றிலும் ஆண்மகன் மணிமாறன் இ.கி.மி. கல்லூரியில் கல்வி பயிலும் இளவல்.

சுற்றத்தவர் நண்பர்களை உபசரித்து கட்டி அணைத்து வாழ்ந்து வந்த செம்மல், தன்னை ஈன்ற தமிழ்த்தாய்க்கும் தான் வாழும் மண்ணின் மக்களுக்கும் தன் அயராத சேவையை வழங்கி வரும் நாளது, காலமெல்லாம் பிற ஊரில் தொழில் புரிந்து கடினவாழ்வு, துயரவாழ்வு வாழ்ந்த காலம் நீங்கி செம்மையான வாழ்வு அரும்பியிருந்த வேளை அது, இன்நாளில் 28.05.2000 அன்று ஊர்ப் பகுதி மக்களின் பணிகளை நிறைவேற்றி வர அன்பு மனைவி மக்களிடம் கொழும்பு செல்ல விடை கேட்டார். தன்கணவனை எதிலும் ஒருபோதும் மறுதலிக்காத மனைவி பேசாமடந்தையாய் நின்றாள், பிள்ளைகளோ நாடு இன்றிருக்கும் நிலையில் கொழும்பு செல்ல வேண்டாம் என நின்றனர். கடவுள் துணையுண்டு நான் பிறர்க்கு ஒருபோதும் தீங்கிளைத்ததில்லை இருதினங்களில் திரும்புவேன் என செல்வங்களிடம் விடைபெற்றுச் சென்றார். செல்லும் வழியில் காலன் தன் கரத்தை நீட்டினான். துயரத்திலும் வேதனையிலும் வெந்து துடித்த பெருமகனார் 31- 05 - 2000 அன்று மரணத்தை தழுவிக் கொண்டார்.

அவர்க்கு நேர்ந்த கொடுமையான செய்தியைக் கேட்டு துடிதுடித்தோம். காண்போமா இனி உன் புன்சிரிப்பை, கண்டவுடன் துடித்து நிற்கும் உன் உபசரிப்பை, மேலான உன் அன்பு முகத்தை, எல்லோர்க்கும் நல்லவரான சிறிஸ்காந்தராஜாவின் ஆத்மா சாந்தி அடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

**முற்றும்**

**''நல்வினை செய்வோம் நற்பேறு பெறுவோம''**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
# கௌரவ. மாவை. சோ. சேனாதிராசா அவர்களின

## கண்ணீர் அஞ்சலி

திரு. செல்வராசா சிறீஸ்கந்தராஜா. பழம்பெரும் தமிழூர் அக்கரைப்பற்றில் திருமணம் செய்து கொண்டவர். அவர் தந்தை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைச் சேர்நதவர். எனக்கு உறவினரும் கூட

தம்பி சிறீஸ்கந்தராஜா சிறுவயதிலிருந்தே வாழ்க்கையில் பல சவால்களுக்கு முகம்கொடுத்தே முன்னேறிவந்தவர். அரச காவல் துறையிலும். வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்திலும் கடமையாற்றியவர். உறவு முறைக்கும் மேலாக என்னுடன் பழகிவந்தவர். எடுத்த எந்த அலுவலில் உறுதியும். தீவிர உழைப்பும் அவரிடமிருந்தது. தனக்குச் சரியென்று பட்டதையும். தவறென்று கண்டதையும் விளைவைப் பாராது எந்த இடத்திலும் துணிந்து சொல்பவர். சென்ற 1994 பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் எமது கட்சி வெற்றிபெற வேண்டுமென்று கடுமையாக உழைத்தார். அதனால் பல துன்பங்களையும் எதிர்நோக்கியிருந்தார் என்பதையும் அறிவேன்.

அக்கரைப்பற்றில் அம்பாறைத்தமிழர் முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட ஒருவராக விளங்கினார். அக்கரைப்பற்று ப. நோ. கூ. சங்கம். அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சபை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அம்பாறை அமைப்புக்களில் முக்கிய உறுப்பினராயிருந்து பல பங்களிப்புக்களைச் செய்தார். திரு. சிறீஸ்கந்தராஜாவின் பேரனார் மாப்பாணர் எனக்குச் சிறிய தகப்பனார். யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வநாயகத்துடன் இணைந்து தமிழரசுக் கட்சியை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தவர் என்பதை இத்தருணததில் நினைவு கூருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 27. 05. 2000. அன்று ) நான் எனது குடும்பத்தினருடன் இந்தியா சென்றிருந்தேன். அடுத்த நாள் சிறீஸ்கந்தராஜா கொழும்பில் கைது செய்யப்பட்ட செய்தி கிடைத்தது. அவரை விடுவிக்க எமது கட்சியினர் முயற்சிகள் எடுத்தனர். ஆனால் ஒரு கிழமைக்குள் அடுத்த வெள்ளிக் கிழமை ஷஷஅம்பாறை தமணை காவல் நிலையத்தில் விசாரணை. அவர் கொல்லப்பட்டு விட்டார். உடல் சிதறடிக்கப்பட்டுக் கிடக்கிறது என்ற செய்தி என்னை அதிர்ச்சிக்கும் மனவேதனைக்கும் உள்ளாக்கிவிட்டது. இலங்கையில் இனப் பிரச்சனை தீர்க்கப்படாமல் ஆயுதப் போர் தொடரும் சூழலில் அரசின் இராணுவச் சட்டங்களுக்குள் பழிவாங்கப்பட்ட. பலியெடுக்கப்பட்ட இன்னொரு தமிழன் அக்கரைப்பற்று சிறீஸ்கந்தராஜா. அவர் இழப்புக்கு எம் ஆறுதல் வார்த்தைகள் எந்த சமாதானத்தையும் கொடுக்கமாட்டாது.

அவர் இழப்பால் நீதிகோரி விடுகின்ற கண்ணீர் நிச்சயம் " ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" என்பதாய் அநியாய ஆட்சியை அழிக்கும். ' நீதியை . விடுதலையை நிலைநாட்டும்' என நம்புகின்றேன்.

என் நெஞ்சம் பொங்கிநிற்கும் இதய அஞ்சலியை அவர் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் செலுத்தி நிற்கின்றேன்.

அன்புடன்
மாவை. சோ. சேனாதிராசா. பா.உ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலையடிவேம்பு பிரதேச தமிழர் மகாசபை தலைவர் வே. சந்திரசேகரம் அவர்களது நினைவுகள்.

திருவாளர் செ.சிறீஸ்கந்தராசா அவர்கள் தமிழர் மகா சங்கத்தின் ஆலையடிவேம்பு பிரதேசக்கிளைச் செயலாளராகச் செயற்பட்ட காலத்தில், அவருடன் சிறிது காலம் பழகும் வொய்புக் கிடைத்தது. அவரை எல்லோரும் 'சிறி' என்று செல்லமாக அழைப்பர், அன்னாரது அகால மரணச் செய்தி, அனைவரையும் அதிர்ச்சிக்குள் ஆக்கியது.

திருவாளர் சிறிஸ்கந்தராசா அவர்கள் இயற்கை எழில் சூழ்ந்த திருமலைப் பட்டினத்தில் 1953ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21ஆம் திகதி பிறந்தார் அவரது உற்றார் உறவினர்கள் யாழ்நகரைச் சேர்ந்தவர்கள். அவரது தந்தையார் திருவாளர் செல்வராசா அவர்கள்,மாப்பாணர் பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் கலியுகக் கடவுளாம் வேலவன் வேல் விரும்பி உறைந்து வெள்ளை நாவற் பதியாம் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள, வங்கக் கடலருகே, வானுயர்ந்து வளமுடன் காணப்படும் தென்னந்தோப்பு ஒன்றில் 'சுப்பிறின்டண்' ஆகக் கடமையாற்றியவர், அக்காலத்தில் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் திருக்கோவிலில் ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின்னர் வந்தாறு மூலை மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றவர்.

அக்கரைப்பற்றில் முதன் முதல் பாதுகாப்புச் சேவையை ஆரம்பித்த பெருமை திருவாளர் சிறிஸ்கந்தராசா அவர்களையே சாரும். அக்காலக் கட்டத்தில் இராக் காலத்தில் பல களவுகளை மறைந்திருந்து கையும் மெய்யுமாய்ப் பிடித்து, பாதுகாப்புச் சேவைக்குப் புகழ் தேடிக் கொடுத்தவர்.

அக்கரைப்பற்றில் பாதுகாப்புச் சேவையைச் செய்யுங் காலத்திலேயே, தம்பியப்பா - செல்வராசா தம்பதிகளின் அடக்கமும் அமைதியுங் குடிகொணட பத்மாவதியை இவ்வாழ்க்கைத் துணைவியாக்கி மணிவண்ணன், மணிசேகர், துஷ்யந்தி, மணிமாறன் ஆகிய நான்கு குழந்தைகளைப் பெற்றவர்.

வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலங்களிலும் மதிநுட்பத்துடனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலுடனும் பல களவுகளைக் கண்டு பிடித்து, கடமையைக் கண்ணுங்கருத்துமாய்ச் செய்து, தொழிற்சாலை உயர் அதிகாரிகளின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்று தொழிற்சாலையில் தனக்கெனத் தனியிடம பிடித்துக் கொண்டவர். ஒரு விடயத்தை எடுத்துக்கொண்டால் அதனைத் திறம்படவும், தீவிரமாகவும், துணிச்சலுடனும் செய்து முடிக்கும் ஆற்றல் சிறிஸ்கந்தராசா அவர்களிடம் நிறைந்து காணப்பட்டது.

காகிதத் தொழிற்சாலையில் இருந்து ஓய்வுவெற்ற பின்னர், ஆலையடிவேம்பு பிரதேச நலனில் அக்கறை கொண்ட பொதுச் சேவையாளனாகப் பணி புரிந்தவர். பொது விடயங்களில் என்ன கருத்து மோதல்கள் ஏற்பட்டபோது, எதையும் மனதில் வைக்காது அத்தினமோ, அல்லது மறுதினமோ நடந்தவற்றை மறந்து மனம்விட்டுப் பேசும் சுபாவங் கொண்டவர்.

ஆலையடிவேம்பு ப.நோ.கூ.ச பணிப்பாளர் சபையில் உபதலைவராகவும், அக்கரைப்பற்று ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய முகாமைக்காரர் சபையிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியவர் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் சில சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், த.வி.கூட்டணி மூலம் நியமனம் பெறுவதற்கும் முன்னின்று செயற்பட்டபவர்.

ஆலையடிவேம்பு பிரதேசம் ஓர் சமூகப் பணியாளரை இழந்து தவிக்கின்றது. அன்னாரது அகால மரணத்தினால், துயரம் தாங்கொணாது தத்தளிக்கும் அவரது அன்பு மனைவி, மக்கள், மற்றம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மகா சங்கத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதில் மனச்சாந்தி அடைகிறோம்.

வே. சந்திரசேகரம்
தலைவர்,
தமிழர் மகாசங்கம்,
ஆலையடிவேம்பு பிரதேசக்கிளை

அக்கரைப்பற்று.
2000. 07. 01.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேர்மைத்திறன் கொண்ட கடமை வீரனாம் எங்கள் சிறி**

**கிழக்கிலங்கை காகித ஆலை ஊழியர்களின் இரங்கல்...**

மண்ணுலகில் 21 – 07 – 53 இல் பிறவி பெற்று குடும்பத்தில் தலைமகனாய் திகழ்ந்தவன் நீ ! கிழக்கிலங்கை காகித ஆலையிலே 01. 11. 79 இல் அமைய ஊழியராக கடமைக்கு சேர்ந்தவன் நீ பாதுகாப்புப்பகுதியை சிரமேற்கொண்டு கடமையை கண்ணியமாய், கட்டுப்பாடாய் ஆற்றியவன் நீ துணிச்சல் மிகு வீரனாக களவுதனை கண்டறிய கண்ணாக இருந்தவன் நீ!..

கண்ணியமாகவே ஊழியர்களை மதித்து ஆலையைக் காக்க உழைத்தவன் நீ!.. துணிச்சலுடன் செயலாற்றிய உன் திறமைகண்டு 02 – 03 – 91 இல் பதவி உயர்வும் பெற்றவன் நீ கை வீசும் பாங்குடனே கால் போட்டு நடந்தாயே கண்டவர்கள் களிப்புறவே புன்முறுவல் செய்தாயே!.. ஆலையிலே பல வருடம் நீர் செய்த சேவைதனை நேர்மை திறன் கொண்ட உள்ளங்கள் மறவாது, விளையாட்டுப் போட்டிகளில் சளைக்காது பங்கெடுத்து ஊக்க மிகு தான் கொடுத்து வெற்றிவாகை சூடிவந்தாய். திட்டிய திட்டமுடன் திருடர்கள் நின்றாலும் உன் நாமம் அறிந்தாலோ சிதறியே ஓடிடுவர். ஆலைவாயிலில் சிறி நாமம் மணத்தாலேபோதும் சேட்பையை தட்டிப்பார்த்திடுவர் ஊழியர்கள், புகழுடன் பல வருடம் எம்முடன் கடமையாற்றி 18 – 09 – 97ல் உதறிவிட்டாய் வேலைதனை, இக்கரையிலிருந்த எம்மில் பற்று இன்றி அக்கரையில் பற்று வைத்து சென்றடைந்தாயோ கடமை உணர்ச்சி கொண்ட கர்ம வீரனே!! எத்திசை நோக்கி எங்கு சென்றாய். காலனவன்! குறிதனிலே பட்டதை நீ அறியாது வாராதவன் கொடுமை மாவிபத்து வந்ததுவோ சிதறிட்டாய் இவ்வுலகை வாழ்ந்தது போதுமென்று அஞ்சிடா நெஞ்சம் கொண்டகாவலனே எங்கு சென்றாய், ஆலையிலே உயர்வான நிறைவான உன் பணிக்கு! மறைவான காவலனே மதிக்கின்றோம் மாண்புடனே சிறி என்ற நாமத்துடன் சிவலோகம் சென்று இறையடி சேர்ந்திடவே இறைவனை பிராத்திக்கின்றோம் நாம்.

**பாதுகாப்பு பகுதியினர்**
**கிழக்கிலங்கை காகித ஆலை, வாழைச்சேனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தமிழன் சிறிஸ்கந்தராஜா

ஐம்பத்தி மூன்றிலே பிறந்திட்ட அழகனே பத்மாவதி
உன் பத்தினியாக எழுபத்து மூன்றிலே கரம் பற்றினாய்
தர்ம பத்தினி ஈன்ற மணிவண்ணன், மணிசேகர், மணிமாறன்
சம்பத்தான துஸ்யந்தினியான நன் மக்கள் பெற்றாயே !

நன் மக்கள் பெற்றிட்ட நாயகனே நிம்மதியாய்
புன் மக்கள் புவி தன்னைப் புறக்கணித்தே போனாயோ
சென்மத்தில் சிறி யுன்னை இருவிழியால் காண்போமோ
வன்மத்தில் கூற்றுவன் வந்துன்னைப் பிரித்தானே !

பச்சைக் குழந்தை போல் பால் வடியும் முகமையா
மெச்சத்தக்க மனம் கொண்டோய் உன் உயிரை
துச்சமாய்த்துறந்தே திடம் காட்டி நின்ற
அச்சமற்ற ஆண்மையனே அக்கரையூர்க்கழகனே

தமிழர் மகாசபை, கூட்டணித் தொண்டனாக
தமிழர் நலன் காக்க அம்பாரை மாவட்டமதில்
கமழ்ந்த கனக மலர்க் கதாநாயகனாக
திகழ்ந்த திலகமே தொலைந்ததேனோ திரவியமே

நீயின்றி வாடுகின்ற நின் நிழலாம் பத்மாவதி
நோயின்றி வாடுகின்றாள் நாயகனே அறியாயோ
பாயிருந்தும் தூக்கமின்றி புரளுகின்றார் புதல்வர்களே
நீயீன்ற நித்திலங்கள் நெடுமூச்சையுணராயோ

வங்காள விரிகுடாவின் வளமான வீசும் காற்றே
சிங்கத்தமிழா சிறிஸ்கந்த ராஜாவே
தங்கத்தமிழா துடிக்குதடா எம் நெஞ்சே
பொங்கத் தெறிக்கப் போனதுவோ நின்னுயிரே.

**டாக்டர் வ. தயானந்தராஜா**
**அரசினர் வைத்தியசாலை,**
**பனங்காடு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் வற்றிடுதே ஈரம்

எங்களிடையே இருந்த ஓர் நண்பன்
இறைவனடி சென்றான் இளவயதில்
கட்டழகன் -
ஈங்கில்லை இன்று! இழப்பை ஈடுசெய
இயலாது தவிக்கிறதே தேசம் !

எங்கும் எவரிடத்தும் கலகலப்பாய்பேசி
இங்கிதமாய் வாழ்ந்த சிறிஸ் கந்த ராஜா
தீவரமாய் -
சங்கங்கள் பலவற்றில் சேர்ந்துபாடுபட்டு
செயல்சிறக்க வாழ்ந்திருந்தானம்மா!

ஆற்றல் பல காட்டி அரியதோர் இடம்வகிக்கும்
ஆர்வம்கொண்டிருந்தான் - அதற்குள் கண்மூட
பயங்கரமாய் -
கூற்றுவன் வந்துசெய்த மாயம், கொடுமையினை
எண்ணுகையில் நெஞ்சில் வற்றிடுதே ஈரம்!

பற்றுவைத்து மக்களுக்காய் பேசியதும் சேவை
ஓடோடிச் செய்ததுவும், தேசம் மறந்திடுமா?
ஆகையினால் -
ஒற்றுமைக்காய் அயராது உழைத்த அவர்அருமை
ஏற்றிப் புகழ்ந்துரைப்போம் இனி !

**என். மணிவாசகன், ஜேபி**
**தலைவர், மகாசக்தி**
**செயலாளர், அம்/மாவட்டம்**
**சமாதான சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத உன் நினைவுகள்

எங்கள் ஆருயிர் நண்பன் சிறிஸ்கந்தராஜாவே எம்மை துயரிலாழ்திப் பிரிந்தனையோ ?

இவ்வுலகம் சரிவராதென எண்ணியோ மேலுலகம் வாழ நினைத்தாய்

காகிதக் குடும்பத்தில் 1979 ஆம் ஆண்டில் காவலனாக கடமை ஏற்றாய்.

ஆலையைக் காப்பதில் என்றும் ஆவலாக காவல் புரிந்தாய்

செய்யும் தொழிலே தெய்வமென்று செயற்பாடு யாவினும் நிரூபித்தாய்.

ஊக்கமாய் உழைத்த சேவையால் உயர் பதவியும் ஏற்றாய்

ஊருக்கு உழைப்பதில் என்றும் உத்தம மனிதனாக விளங்கிருந்தாய்.

ஒற்றுமையை விதைத்திடவே ஓயாத குரல்கொடுத்தாய்.

அழிக்கப்பட்டது உன் உடல்தான் அழியாதிருக்கும் உன் புகழ்

உயிரைத் துச்சமென மதித்து துணிந்து நீ செயல் புரிந்தாய்

நீ நடத்தால் நிலமதிரும் ராஜநடை உன் நாற்புறமும் சூழும் நண்பர் படை.

நீ ஆலை வாசலில் காவல் புரிந்தால் அஞ்சி நடுங்கும் கள்வர் படை.

விசாரணைக் களத்தில் என்றும் உன் விவேகம் தான் எதிரொலிக்கும்.

ஈரமில்லா அரக்கர் உந்தன் இன்னுயிரை பறித்து விட்டார்.

உன்னுடல் அழித்த போதும் எம்முடன் நீ வாழ்ந்திருப்பாய்

உன் ஆன்மா சாந்தி உற இறைவனை நாம் இரஞ்சிகின்றோம்.

இனியொரு நாள் உந்தனைப்போல் இனை கிடைக்க இரங்குகின்றோம்.

**சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!**

*வாழைச்சேனை காகித ஆலை*
*பாதுகாப்பு உத்தியோகத்தர் சார்பாக*
*கே. கிருஷ்ணபிள்ளை, பாதுகாப்பு உதவியாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் நாயகனாய், பாசத்தின் சிகரமாய், நேசமாய் காத்து சீருடனும் சிறப்புடனும் வளர்த்து, வழிகாட்டி வழித்துணையாய் இருந்த, எனது கணவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் துயரவேளையில் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்க்கும், அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதலளித்தவர்க்கும், தந்தி மூலமும் தொலைபேசி மூலமும் எனது கணவனை நினைவு கூர்ந்தவர்களுக்கும், எனது இதயம் கனிந்த நன்றிகளை, என் குழந்தைகள் சார்பிலும், குடும்பத்தினர் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வண்ணம்
சி. பத்மாவதி
அன்பு மனைவி.

விபுலானந்த வீதி,
ஆலையடிவேம்பு
அக்கரைப்பற்று - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org